







# "வரலாற்றைப் படியுங்கள்... வரலாற்றைப் படையுங்கள்!"

**திண்டுக்கல் ஐ.லியோனி, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர்**

**கழக இளைஞர் அணி சார்பில், இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் பிப்ரவரி 15, 16 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. அதில் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி அவர்கள் கலந்துகொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 'நெஞ்சுக்கு நீதி', கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'உங்களில் ஒருவன்' ஆகிய தன் வரலாற்று நூல்களை மையமாக வைத்து, இளம் பேச்சாளர்கள் வரலாற்று ரீதியாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் குறித்து அவர் ஆற்றிய உரை:**

"இளம் பேச்சாளர்கள் வரலாற்றைத் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது. நான் இதுவரை எனது உரையைக் குறிப்புகளுடன் தயார் செய்து வந்ததே கிடையாது. பயிற்சி கொடுக்க வேண்டும் என்பதற்காக, நிறைய நூல்களை வாசித்து, வரலாற்றுப்பூர்வ செய்திகளைத் தொகுத்து உரையைத் தயாரித்துள்ளேன்.

## வரலாறு என்னும் காலக்கண்ணாடி!

பேச்சாளர்களில் இரண்டு வகை உள்ளனர். உரைக்காகப் பல நூல்களைப் படித்து நிறைய தயாரிப்புகளுடன் மேடையில் பேசத் தொடங்குவார்கள். ஆனால், ஒன்றுமே நினைவுக்கு வராது. இன்னொரு தரப்பு இருக்கிறது. ஒன்றுமே தயார் செய்யாமல் சென்றவர்களை, மேடைக்கு அழைத்து ஒரு தலைப்பைக் கொடுத்து பேசக் கூறிவிடுவார்கள். உரையைத் தயார் செய்து பேசும்போது கிடைக்கும் பாராட்டை விட, அந்த சமயத்தில் நாம் யோசித்துப் பேசும் கருத்துகள் சில சமயங்களில், மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெறும். எனவே இரண்டு வகையிலும் நீங்கள் பேசத் தயாராக இருக்க வேண்டும்.

வந்த வழியைத் தெரிந்து கொண்டால்தான், வரப்போகும் வழியை நாம் செம்மையாக்க முடியும். அதற்கு முதலில் வந்த வழி நமக்குத் தெரிய வேண்டும். அதற்காக நாம் வரலாற்றைப் படிக்க வேண்டும். காரில் முன்புறம் மிகப்பெரிய கண்ணாடி இருக்கும். அது நமக்கு முன்னால் செல்லும் வாகனங்களைப் பார்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. ஆனால், காரில் கதவோரம் இடது, வலதுபுறங்களில் இரண்டு கண்ணாடிகள் இருக்கும். அதுதான் வரலாறு போன்றது.

பின்னால் வரும் வாகனங்களையும், நம்மைக் கடந்து செல்லும் வாகனங்களையும் காட்டுவதுடன் மட்டுமின்றி, இன்னொரு வாகனத்தை விட, நாம் முன்னோக்கிச் செல்லவும், அந்தச் சிறிய கண்ணாடிகள் உதவும். அந்தச் சிறிய கண்ணாடிகள் போலதான் வரலாறு. ஆக, நீங்கள் வரலாற்றை முழுவதுமாகத் தெரிந்துகொண்டால்தான், அடுத்து சிறப்பாக உங்கள் பயணத்தைத் தொடர முடியும்.

வரலாற்றில், நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய மிக அற்புதமான தன் வரலாற்று நூல் தலைவர் கலைஞர் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி'. மகாத்மா காந்தி 'சத்திய சோதனை' என்ற தலைப்பிலும், ஹிட்லர் 'மெயின் காம்ப்' என்ற பெயரிலும் தன் வரலாற்றை எழுதியுள்ளனர். ஆனால், தனது வரலாற்றை 'நெஞ்சுக்கு நீதி' என்ற தலைப்பில் எழுதிய ஒரே தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தான்.

முத்தமிழறிஞர் கலைஞர், தான் பிறந்த 1924ஆம் ஆண்டு குறித்து 'நெஞ்சுக்கு நீதி'யில் குறிப்பிடுகிறார். 'நான் 1924-ஆம் ஆண்டு திருக்குவளையில் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தேன்' என்று அவர் எழுதியிருந்தால் அது சாதாரணமான விஷயம். ஆனால், கலைஞரோ, 1924-ஆம் ஆண்டு நடந்த உலக வரலாற்று நிகழ்வுகள் அனைத்தையும் அடுக்குகிறார். அதில் முதல் நிகழ்வாக ரஷ்யாவின் மாவீரர் லெனின் மறைந்து, ஜோசப் ஸ்டாலின் அதிபராகப் பதவியேற்ற ஆண்டு 1924. அந்த வருடம்தான் நான் பிறந்தேன். காங்கிரஸுக்கு மகாத்மா காந்தி ஒரே வருடம்தான் தலைவராக இருந்தார். அந்த 1924-ஆம் ஆண்டுதான் நான் பிறந்தேன். கேரளாவில் வைக்கம் போராட்டம் வென்றது. அந்த ஆண்டுதான் நான் பிறந்தேன்

ஹிட்லர் தனது சுயசரிதையை எழுதியது 1924. அந்த ஆண்டுதான் நான் பிறந்தேன் என்று எழுதியிருக்கிறார். தான் பிறந்த வருடத்தை உலக அரசியல், இந்திய அரசியலின் வரலாற்றுத் தரவுகளோடு சொன்னவர் கலைஞர்.

வரலாறு கண்ணாடி போன்றது என்று சொன்னேன் அல்லவா? அந்தக் கண்ணாடியை வைத்தே பேச்சாற்றல் குறித்து, மிகவும் அற்புதமான கருத்துகளை கலைஞர் கூறியுள்ளார். 'கண்ணாடியை நாம் பயன்படுத்துகிறோம். அதற்கு கண்ணாடி என்ற பெயர் எப்படி வந்தது தெரியுமா? அதைத் தாங்கி இருப்பது காது. கண்ணாடியைச் சிறப்பாக நிறுத்தி வைத்திருப்பது மூக்கு. மூக்கும் காதும் இல்லாவிட்டால், கண்ணாடியை நாம் பயன்படுத்த முடியாது. ஆனால், பயன்படுத்தும் கண்தான் பெயர் வாங்கும். கண்ணாடியைத் தாங்கும் காதும், மூக்கும் பெயர் வாங்குவது இல்லை. அதுபோலவே நீங்களும் கைதட்டல் வாங்க வேண்டும், பெயர் வாங்க வேண்டும் என்பதற்காக மட்டும் பேசக் கூடாது. கைதட்டாவிட்டாலும் நீங்கள் பேசிக்கொண்டே இருக்க வேண்டும். உங்கள் பேச்சு என்பது காது, மூக்கு போல. பின்னால் இருந்து கேட்கும் மக்களுக்குச் சென்று சேர வேண்டும்" என்று அற்புதமாகச் சொன்னார் கலைஞர்.

## மக்களைக் கவர்ந்த மகத்தான தொடக்கம்!

'என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே..!' என்று முதல் வரியிலேயே கூறி, மக்களை தன் வயப்படுத்திய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான். அதேபோல இன்றைய முதலமைச்சர் 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று வார்த்தையைச் சொன்னவுடன் இந்தியாவே திரும்பிப் பார்த்தது.

உரையைத் தொடங்கும் போது முதல் வார்த்தையே சிறப்பாக இருக்க வேண்டும். ஆனால், இன்றைக்கு சிலர் 'என் நெஞ்சில் குடியிருக்கும்' என பேசத் தொடங்குகிறார்கள். குடியிருப்பவர்கள் எப்போது வேண்டுமானாலும் காலி செய்துவிட்டுச் சென்றுவிடலாம். ஏனெனில் அவர்கள் வாடகைக்குக் குடியிருப்பவர்கள். ஆனால், தன் உயிரோடு கலந்திருக்கும் உடன் பிறப்புகள் எப்போதும் நம்மோடுதான் இருப்பார்கள் என்பதுதான் கலைஞர் உரையின் தொடக்கம்.

திராவிட நாடு கோரிக்கை தொடர்பாக பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் முகமது அலி ஜின்னாவை சந்திக்க மும்பைக்கு செல்கின்றனர். முகமது அலி ஜின்னாவைச் சந்தித்துவிட்டு, மும்பை தாராவியில் தமிழ்க் கொடியை ஏற்றி வைத்து, அம்பேத்கர் தலைமை தாங்கிய கூட்டத்தில் பெரியார் பேசுகிறார். பெரியார் தமிழில் பேசிய உரையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் பேரறிஞர் அண்ணா. அதேபோல் அம்பேத்கர் ஆங்கிலத்தில் பேசியதை தாராவி மக்களுக்கு புரியும்படி தமிழில் மொழி பெயர்த்ததும் அண்ணாதான். பெரியாரையும் அம்பேத்கரையும் மும்பை மக்களிடம் கொண்டு சென்ற பெருமை அண்ணாவைத்தான் சாரும். இந்த வரலாற்றையெல்லாம் நீங்கள் அறிந்துகொள்வது உங்கள் பேச்சாற்றலை மேம்படுத்த உதவும்.

> **"தொண்டர்களுக்கு 11 லட்சம் பக்கங்கள் கடிதம் எழுதிய ஒரே தலைவர் கலைஞர்தான். உலக வரலாற்றில் வேறு எந்தத் தலைவரும் இதுபோல கடிதம் எழுதியதாக வரலாறு இல்லை. உடன்பிறப்புகளுக்கு கலைஞர் எழுதிய கடிதங்கள் மட்டும் 54 நூல்களாக தொகுக்கப்பட்டுள்ளன."**

## எந்தக் கொம்பனாலும் அழிக்க முடியாது!

காதலர்கள் எழுதிக்கொள்ளும் கடிதம், குடும்பத்தினர் நலம் விசாரித்து எழுதிய கடிதங்களைப் பார்த்திருப்போம். ஆனால், தொண்டர்களுக்கு 11 லட்சம் பக்கங்கள் கடிதம் எழுதிய ஒரே தலைவர் கலைஞர்தான். உலக வரலாற்றில் வேறு எந்தத் தலைவரும் இதுபோல கடிதம் எழுதியதாக வரலாறு இல்லை. உடன்பிறப்புகளுக்கு கலைஞர் எழுதிய கடிதங்கள் மட்டும் 54 நூல்களாக தொகுக்கப்பட்டுள்ளன.

1949-ஆம் ஆண்டு கழகம் தொடங்கப்பட்டாலும் தேர்தல் அரசியலில் பங்கெடுக்கவில்லை. 1956ஆம் ஆண்டு நடந்த 'திருப்புமுனை மாநாட்டில்' நாம் தேர்தல் அரசியலில் ஈடுபடலாமா அல்லது சமூக இயக்கமாகவே தொடரலாமா என்று பேரறிஞர் அண்ணா இரண்டு பெட்டிகளை வைத்து வாக்கெடுப்பு நடத்துகிறார். பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில்தான் தி.மு.க. தேர்தலில் நிற்க வேண்டும் என்று முடிவெடுக்கிறது. 'தொண்டர்கள் தேர்தல் அரசியலில் ஈடுபட விரும்புகிறார்களா?' என ஜனநாயக வழியில் கருத்துக் கேட்டு அரசியலில் இயங்கிய இயக்கம் திமுக. ஆனால், இன்றைக்கு அப்படியா? கட்சி தொடங்கிய அடுத்த வருடமே முதலமைச்சர் ஆகிவிடுவோம் என்று ஒரு கும்பல் புறப்பட்டுள்ளது. திராவிட இயக்க வரலாறுகளைப் படித்து முடிப்பதற்குள், அவர்களின் ஆயுளே முடிந்துவிடும். திமுக வரலாற்றை எந்தக் கொம்பனாலும் அழிக்க முடியாது.

## கழகத்தலைவரின் நேர்மை!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை 'உங்களில் ஒருவன்' நூலில் பகிர்ந்துள்ளார். பள்ளிப் பருவத்தில் நடந்த சம்பவம் அது. அப்போது, சைக்கிளில் இரண்டு பேர் அமர்ந்து செல்லக்கூடாது. அப்படிச் செல்வதை காவல் துறையினர் பார்த்தால், தண்டனை உண்டு. பள்ளியில் படிக்கும் போது நம் தலைவர் தனது நண்பருடன் சைக்கிளில் சென்றுள்ளார். காவல் துறையினர் அவரைப் பிடித்துவிட்டனர். 'உன் பெயர் என்ன?', 'உங்கள் அப்பா பெயர் என்ன?' என்று கேட்கிறார் காவல்துறை அதிகாரி. 'என் பெயர் ஸ்டாலின், எனது அப்பா பெயர் கருணாநிதி, கோபாலபுரத்தில் வசிக்கிறேன்' என்று நம் தலைவர் கூறுகிறார்.

'அப்பா என்ன வேலை பார்க்கிறார்?' என்று கேட்க, 'தலைமைச் செயலகத்தில் பொதுப் பணித் துறையில் வேலை பார்க்கிறார்' என்று கூறுகிறார். 'பொதுப்பணித்துறையில் உங்கள் அப்பா என்னவாக இருக்கிறார்?' என்கிறார் அந்தக் காவல்துறை அதிகாரி. 'அமைச்சராக இருக்கிறார்' என்று சொன்னதும் பதற்றத்துடன்,



'கலைஞர் மகனா நீங்க? முதலிலேயே சொல்லி இருக்கலாமே' என்று அந்த காவலர் கேட்கிறார்.

'முதலிலேயே சொல்லியிருந்தால் என்னை அனுப்பி இருப்பீர்கள்... அதைச் சொல்லி என் தண்டனையில் இருந்து தப்பிக்க நான் விரும்பவில்லை. மேலும் அமைச்சரின் மகன் என்பதற்காகச் சலுகை பெறுவது என் தந்தைக்கும் பிடிக்காது' என்று சொன்னார் நம் கழகத்தலைவர். அமைச்சரின் மகனாக இருந்தும் அரசின் விதியை மதித்தவர், நம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்.

## முதலமைச்சரைக் கவர்ந்த தி.மு.க. நிர்வாகி!

இளைஞர் அணிச் செயலாளராக நம் தலைவர் இருந்த போது, 'யார் அதிகம் நிதி தருகிறார்களோ அவர்களுக்குத்தான் அன்பகம் ஒதுக்கப்படும்' என தலைமையின் சார்பில் அறிவிக்கப்பட்டது. இதற்கு நிதி திரட்ட நம் தலைவர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்கிறார். ஓர் ஊரில் கொடியேற்ற வேண்டும் என்றால் ரூ.100 நிதி தர வேண்டும் என்பது நிபந்தனை. தலைவர் கொடியேற்றச் சென்ற ஒரு பகுதியில் ரூ.50 மட்டுமே வசூலித்து இருந்தனர். அந்த பகுதிச் செயலாளர் தலைவர் கொடி ஏற்றும் நேரம் பார்த்து அங்கு இல்லை. அங்கிருந்த ஒருவர் நீங்கள் கொடியேற்றுங்கள், அவர் பணம் எடுக்கச் சென்றுள்ளார் வருவார், உங்களிடம் ரூ.50-ஐ தரச் சொன்னார் என்று வழங்கியுள்ளார். கொடியேற்றி முடித்த பின்பும் பகுதிச் செயலாளர் வரவில்லை. எங்கே தான் போனார் என்று தலைவர் கேட்டபோது, ரூ.50-ஐ கொடுத்த நபர்தான், பகுதிச் செயலாளர் என்று கூறியுள்ளார்.

ஒரு 50 ரூபாய்க்காக தலைவர் நம் பகுதியில் கழகக் கொடி ஏற்றாமல் சென்றுவிடக் கூடாது என்பதற்காக உண்மையை மறைத்துள்ளார் அந்த திமுக தொண்டர். ஒரு பேட்டியில் 'அரசியல் வாழ்க்கையில் உங்களை மிகவும் கவர்ந்தது யார்?' என நம் தலைவரிடம் ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது. 'ரூ.50-க்காக தன் பகுதியில் கழகக் கொடி ஏறாமல் இருக்கக்கூடாது என்று என்னிடமே நடித்த நிர்வாகிதான் என்னை மிகவும் கவர்ந்தவர்' என்று குறிப்பிட்டார் நம் கழகத்தலைவர்.

நம் கழகத்தலைவர் எப்படிப்பட்டவர் என்பதற்கு இன்னொரு உதாரணம் சொல்லலாம். 2016-ஆம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்யும் விழாவில் 17-வது வரிசையில் நமது தலைவரை அமர வைத்தனர். அப்போது, 'ஓர் எதிர்க்கட்சித் தலைவரை இப்படி அவமானப்படுத்தலாமா?' என்று பத்திரிகைகள் எழுதின. ஆனால், நம் கழகத்தலைவர் 2021ல் 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' என்று தான் முதலமைச்சராகப் பதவியேற்கும்போது, ஆளுநர் தேநீர் விருந்தில், தன்னை அவமானப்படுத்திய எதிர்க்கட்சியின் தலைவர்களை அருகே அமரவைத்து, அரசியல் நாகரிகத்தைக் கற்பித்த தலைவர்தான் தளபதி மு.க.ஸ்டாலின்.

## மக்களிடம் பேசச் செல்லுங்கள்!

சாக்ரடீஸுக்கு விஷம் வைத்துக் கொன்றவர்கள் இறந்துபோனார்கள். சாக்ரடீஸ் இன்னும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார். பெரியார் மீது செருப்பை வீசியவர்கள் இறந்துபோனார்கள். பெரியார் இன்னும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார். அண்ணாவை அவமானப்படுத்தியவர்கள் இறந்து போனார்கள். அண்ணா இன்னும் நம்மோடு வாழ்கிறார். கலைஞரைக் கைது செய்தஅதிகாரிகள் இறந்துபோனார்கள். தெற்கில் உதிக்கும் சூரியனாக கலைஞர் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

அதேபோல மிசா சட்டத்தில் சிறையில் இருந்தபோது நம் தலைவர் மு.க.ஸ்டாலினைத் தாக்கிய போலீஸ் அதிகாரி இறந்துபோனார். ஆனால், எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழக முதலமைச்சராக இந்தியாவின் நம்பர் 1 முதல்வராக வாழ்ந்துகொண்டு இருக்கிறார். உதயநிதி படத்தை ஈட்டியால் வைத்து குத்திய சாமியார் வரலாற்றில் காணாமல் போவார். ஆனால், உதயநிதி ஸ்டாலின்தான் அடுத்த திராவிட மாடல் ஆட்சியைக் காப்பாற்றுகின்ற ஐந்தாம் தலைமுறையாக உருவெடுப்பார்.

ஆகவே, வரலாற்றை நன்றாகப் படியுங்கள், வரலாற்றை உருவாக்குங்கள். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரண்டு நாட்கள் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்து பெரிய பேச்சாளர்களைப் பேச வைத்துப் பயிற்சியளித்து உங்களுக்கு மகத்தான வாய்ப்பை உருவாக்கித் தந்துள்ளார். அனுபவங்களை உள்வாங்கிக் கொண்டு, அடுத்த மேடைக்கு சிங்கங்கள் போல நீங்கள் செல்ல வேண்டும்.

உங்களின் பேச்சாற்றல் கொள்கையைப் பரப்பி ஓட்டு கேட்பதற்காக மட்டும் பயன்படப்போவது இல்லை. தந்தை பெரியார் வழங்கிய திராவிடச் சிந்தனையை தொடர்ந்து மக்களிடம் சொல்லும் கேடயங்களாக நீங்கள் இருக்க வேண்டும். திராவிட சிந்தனையை கட்டிக் காப்பாற்றும் மிகப்பெரிய பொறுப்பு உங்களிடம் உள்ளது. திராவிடத்தை உருவாக்க புறப்படுவோம். நாம்தான் 2026-இல் ஆட்சி அமைக்கப் போகிறோம்; நம் தலைவர்தான் மீண்டும் முதல்வராகப் போகிறார் என்பதை மனதில் கொண்டு மக்களிடம் பேசச் செல்லுங்கள்."